**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.</u>**
**முன்னிலை: திருமதி.பி.கே. தமயந்தி,எம்,ஏ.,பி.ல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2022 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20 ம் நாள் வியாழக்கிழமை**

**<u>இ.ம.எண். 6/2021 –இன்– அ.வ.எண்.536/2020</u>**

1. சோலுடைய ராஜீ (இறந்தார்)
2. சோலுடைய அபிமன்னன்
3. கொடுக்க பாப்பாயம்மாள்
4. சோலுடைய ராணி
5. விஜயா
6. அய்யம்மாள்
7. ஆனந்த சித்தன்
8. மைனர் மணிகண்டன்
9. மைனர் தர்மசாஸ்தா

(மைனர் பை கார்டியன் தாயார் விஜயா) . . . மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. சக்கிலித்தி செல்லமுத்து
2. சக்கிலித்தி பொன்னுசாமி
3. சக்கிலித்தி சீரங்கன்
4. சக்கலித்தி பழனிசாமி
5. சக்கிலித்தி மணிகண்டன்
6. சக்கிலித்தி வசந்தி
7. சக்கிலித்தி செல்வம் (எ) செல்லம்மாள்
8. சக்கிலித்தி விஜயா
9. நாகராஜன்
10. சில்லாளி பொன்னுசாமி
11. சில்லாளி ராஜேந்திரன்
12. தமிழக அரசு பை அதன்

மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல். . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு 18.10.2022 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு

வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.R.தங்கராஜன், அவர்கள் ஆஜராகியும், 1 முதல்5 எதிர்மனுதாரர்கள்/1 முதல்5 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.முருகேஷ், 10 ம்எதிர்மனுதாரர்/10 ம்பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.K.மோனிகா, அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 9, 11, 12 ம்எதிர்மனுதாரர்கள்/6 முதல் 9, 11, 12 ம் பிரதிவாதிகள் தரப்பில் தோன்றா தரப்பினராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்ட காரணங்களுக்காக தாவா பிராதை திருத்திக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று உரிமையியல் விசாரணைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 1. மனுதாரர் தரப்பு மனு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:

நான் இம்மனுவில் 2 ம்மனுதாரர்/தாவாவில் 2 ம்வாதி. மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது செயலுறுத்து கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் தாவா சொத்துடன் சேர்த்து நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அளவு வரைபடத்தில் P1, P2, P3. P4 என்று கூறப்பட்டுள்ள அளவுகள் கொண்ட பகுதியினை மனுதாரர்கள் சுமார் 50 வருடங்களுக்கு மேல் வேண்டும் மகசூல் வைத்து அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி P1, P2, P3. P4 பகுதியானது மனுதாரர்களுக்கு நீண்ட கால அனுபப்படி பாத்தியப்பட்டது. ஆனால் மேற்படி P1, பகுதியானது புல வரைபடத்திலும் இதர வருவாய்துறை ஆவணங்களிலும் தரிசு புறம்போக்கு என்றும் P1, P2, P3. P4 பகுதிகள் பிரதிவாதிகள் நிலத்திலும் சப்டிவிசன் செய்யப்பட்டுள்ளது. ஆனால் P1, P2, P3. P4 மனுதாரர்களின் நீண்டகால அனுபவத்தில் இருந்து வருவதால் சட்டப்படி மேற்படி பரிகார சொத்துக்களை மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகைக்கும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர உறுத்துக்கட்டளைக்கும் மேற்படி சொத்துக்களை கோர

வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே மனுவில் கண்டவாறு தாவாவை திருத்திக்கொள்ள அனுமதிக்க அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 3ம்எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மறுப்புரை: (1,2,4,5,10ம் எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்)**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. நீதிமன்ற ஆணையர் அளவு வரைபடத்தில் P1, P2, P3. P4 என காட்டப்பட்டுள்ள பகுதியானது வாரிசுகளின் அனுபவத்தில் உள்ளதாக சொல்வது பொய்யானது. மேலும் ஆணையர் தாக்கல் செய்துள்ள அளவு வரைபடத்தினை அடிப்படையாக கொண்டு முன்னிட்ட வழக்கு மூல சங்கதிகளை மாற்றி அமைக்க இயலாது. மேலும் ஆணையர் அறிக்கையில் P1, P2, P3. P4 என காட்டப்பட்டுள்ள நிலங்கள் குறித்து ஏற்கனவே உள்ள பிராதில் எவ்வித சங்கதிகளும் முன்னிடப்படாமல் அதைப் பொறுத்து எவ்வித வழக்கு மூலமும் இல்லாத நிலையில் புதிதாக ஒரு வழக்கு மூலத்தை ஏற்படுத்தும் நோக்கில் பிராதை திருத்தம் செய்ய கோர சட்டப்படி தடைபட்டுள்ளனர். மேற்படி P1, P2, P3. P4 நிலங்களின் சர்வே எண்கள் பொருதது பிராதில் எவ்வித வழக்கு மூலமும் முன்னிடாத நிலையில் திருத்தல் மனுப்படி பிராதை திருத்தம் செய்ய கோர இயலாது. அவ்விதம் திருத்தம் செய்யப்படுமானால் அது வழக்கின் அடிப்படையே மாற்றிவிடும். திருத்தல் கோரும் விவரமானது வழக்கு பரிகாரத்திற்கு துளியும் தொடர்பில்லாத அதற்கு எதிரான சங்கதிகளாகும் என்பதால் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கதல்ல. ஆகவே மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**4. இந்நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால் மனுதாரர்களின் இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே ஆகும்.**

மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக தாவா பிராதை திருத்திக்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் மனுதாரரின் பிரமாண பத்திரத்தில் அசல் வழக்கில் 2ம் வாதி என்றும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் பேரில் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சொத்துடன் சேர்த்து நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அளவு வரைபடத்தில் P1, P2, P3. P4 என்று கூறப்பட்டுள்ள அளவுகள் கொண்ட பகுதியினை மனுதாரர்கள் சுமார் 50 வருடங்களுக்கு மேல் மகசூல் வைத்து அனுபவித்து வருவதாகவும், P1, P2, P3. P4 பகுதியானது மனுதாரர்களுக்கு நீண்ட கால அனுபவப்படி பாத்தியப்பட்டதாகும். ஆனால் மேற்படி P1 பகுதியானது புல வரைபடத்திலும், இதர வருவாய் ஆவணங்களிலும் தரிசு புறம்போக்கு என்றும் P1, P2, P3. P4 பகுதிகள் பிரதிவாதிகள் நிலத்திலும் சப்டிவிஷன் செய்யப்பட்டுள்ளது. ஆனால் P1, P2, P3. P4 மனுதாரர்களின் நீண்ட கால அனுபவத்தில் இருந்து வருவதால் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகைக்கும், நிரந்தர உறுத்துக்கட்டளைக்கும் திருத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாகவும் மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்றும் மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில் 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டு, 1, 2, 4, 5, 10 எதிர்மனுதாரர்கள் அவர்களுடையதாக பாவித்துக் கொண்டுள்ளார்கள். 6, 7, 8, 9, 11, 12 எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினராகி உத்தரவிடப்பட்டுள்ளது.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையில் நீதிமன்ற ஆணையரின் அளவு வரைபடத்தில் P1, P2, P3. P4 என காட்டப்பட்டுள்ள பகுதியானது வாரிசுகளின் அனுபவத்தில் உள்ளதாக சொல்வது பொய்யானது. மேலும் ஆணையர் தாக்கல் செய்துள்ள அளவு வரைபடத்தினை அடிப்படையாக கொண்டு முன்னிட்ட வழக்குமூல சங்கதிகளை மாற்றி அமைக்க இயலாது. மேலும் ஆணையர் அறிக்கையில் P1, P2, P3.

P4 என காட்டப்பட்டுள்ள நிலங்கள் குறித்து ஏற்கனவே உள்ள பிராதில் எவ்வித சங்கதிகளும் முன்னிடப்படாமல் அதைப் பொறுத்து எவ்வித வழக்குமூலமும் இல்லாத நிலையில் புதியதாக ஒரு வழக்குமூலத்தை ஏற்படுத்தும் நோக்கில் பிராதை திருத்தம் செய்ய கோர சட்டப்படி தடைபட்டுள்ளார் என்றும் அவ்விதம் திருத்தம் செய்யப்படுமானால் வழக்கின் அடிப்படையையே மாற்றிவிடும் என்றும் திருத்தல் கோரும் விவரம் வழக்கு பரிகாரத்திற்கு துளியும் தொடர்பு இல்லாததால் மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு ஆவணங்களை ஆராய்ந்து பார்க்கும் போது, மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் தாவா பிளானில் AB என்று குறிப்பிட்டுள்ள கிழமேலில் தென்வடலாக வாதிகளின் நிலத்தின் தென்புறத்தில் உள்ள வனத்துறைக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் வரை உள்ள 20 அடி பாதையை பிரதிவாதிகள் அமைத்துத்தர செயலுறுத்துக் கட்டளை பிறப்பித்தும் அவ்வாறு பிரதிவாதிகள் தாவா AB பாதையை அமைத்துத்தர மறுக்கும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள அனுமதியளிக்க உத்தரவிட்டும் என்று செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கில் இ.ம.974/15 என்ற எண்ணில் நீதிமன்ற ஆணையர் வழக்கறிஞர் திரு.E.ராஜகோபால் அவர்கள் நியமிக்கப்பட்டு, தாவா சொத்தை அளந்து 28.11.2016 ல் அளவறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டு மனு முடித்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்ற ஆணையரின் அளவறிக்கையில் P1, P2, P3. P4 பகுதி மேடு என்று குறிப்பிட்டு அளவு வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் / வாதிகள் தரப்பு பிராதை ஆராய்ந்து பார்க்கும் போது தாவா மாதிரி வரைபடத்தில் AB என்று குறிப்பிட்டுள்ள கிழமேலில் தென்வடலாக வாதிகளின் நிலத்தின் தென்புறத்தில் உள்ள வனத்துறைக்கு பாத்தியப்பட்ட நிலங்கள் வரை உள்ள 20 அடி பாதையை பிரதிவாதிகள் அமைத்து தரக் கோரி செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு

தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு தாவா பாதையைப் பொறுத்து செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சங்கதிகளில் வெளிப்படுத்தாத விபரங்களைப் பொறுத்து பிராதை திருத்த வேண்டும் என்று மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் வழக்கு தாக்கல் செய்துள்ளது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. மேலும் தாவா சங்கதிகளில் தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கேட்கப்படாத நிலையில் தற்போது தாவாவில் நீதிமன்ற ஆணையர் குறிப்பிட்டுள்ள P1, P2, P3. P4 பகுதிகள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாவாவை திருத்த வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. மனுவில் கண்டுள்ள திருத்தங்கள் தாவாவின் இயல்பு மற்றும் தன்மையை பாதிக்கும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் P1, P2, P3. P4 நிலங்கள் குறித்து பிராதில் எவ்வித சங்கதிகளும் முன்னிடப்படாமல் அதைப் பொறுத்து பிராதை திருத்தம் செய்யக் கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும் வகையில் உள்ளது. தாவாவில் ஏற்கனவே குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தைப் பொறுத்து பாதையை அமைத்து தர செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் பிறப்பிக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துவிட்டு மீண்டும் சில சொத்துக்கள் மனுதாரர்களின் அனுபவத்தில் உள்ளது என்று விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும் கேட்டு தாவாவை திருத்த கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதிட்டதைப் போல மனுதாரர்கள் தரப்பில் கோரியுள்ள திருத்தம் வழக்கின் அடிப்படை தன்மையை மாற்றும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுவதால், மனுதாரர்களின் மனுவில் தகுநிலை இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்

தொகை உண்டு.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2022ம் வருடம் அக்டோபர் மாதம் 20ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI Digitally signed by P K DHAMAYANTHI Date: 2022.10.20 16:32:23 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– ––இல்லை––
2. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– ––இல்லை––

P K DHAMAYANTHI Digitally signed by P K DHAMAYANTHI Date: 2022.10.20 16:32:34 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**